# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR

| | |
|---|---|
| Calender : <br> Miscellaneous : <br> Preliminary Register : CC 37/2021 <br> Sessions : <br> Deposition of Witness for : LW8/PW-7 <br> Name :, மருத்துவர் கலைச்செல்வி <br> Father's/Husband's Name : <br> Nationality : Indian | Village: <br> Age :46 <br> Taluk : <br> Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 03.02.2025.**

சாட்சியை திருநீலக்குடி காவலர் திரு. வினோத் என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**1. 2 எதிரிகள் ஆஜரில் இருந்தார்கள்.**

**முதல் விசாரணை**:

நான் தற்போது தஞ்சாவூர் அரசு மருத்துவ கல்லூரியில் முதுகலை பட்டப்படிப்பு 2 ம் ஆண்டு படித்து வருகிறேன். நான் கடந்த 07.07.2019 ம் தேதி அதிகாலை 12.10 மணியளவில் கும்பகோணம் அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் உதவி மருத்துவராக பணியில் இருந்தபோது அன்றைய தினம் சுமார் 40 வயது மதிக்கதக்க பனங்காட்டாங்குடி கிராமத்தை சேர்ந்த சாமிநாதன் மனைவி லதா என்பவரை அவரது கணவர் சாமிநாதன் சிகிச்சைக்காக அழைத்து வந்திருந்தார். நான் அவரை விசாரித்தபோது 06.07.2019 ம் தேதி

இரவு 9.30 மணியளவில் அவரது வீட்டில் வைத்து அடையாளம் தெரிந்த 1 ஆண், பெண் உதடு கழுத்தில் கடித்து கீழே பிடித்து தள்ளி விட்டதாக கூறினார். நான் அவரை பரிசோதித்தபோது அவர் சுயநினைவுடன் இருந்தார். அவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டது. 1. அவரது கீழ் உதட்டின் நடுப்பகுதி துண்டிக்கப்பட்டு ரத்தம் வடிந்து கொண்டிருந்தது. 2. அவரது இடது பக்க முன் தலையில் 4X3 செ.மீ அளவில் ஒரு கண்றிய காயம் காணப்பட்டது. 3. அவரது இடது பக்க தலையில் 3X2 செ.மீ அளவில் ஒரு கண்றிய காயம் காணப்பட்டது. அவருக்கு முதல் உதவி செய்து சிகிச்சை அளித்து மேல் சிகிச்சைக்காக தஞ்சாவூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவ மனைக்கு அனுப்பி வைத்தேன். அங்கு அவர் 31.07.2019 ம் தேதி வரை சிகிச்சையில் இருந்துள்ளார். தஞ்சாவூர் அரசு மருத்து கல்லூரி மருத்துவமனையில் மேற்படி நபருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் மனோகரன் என்பவரின் கருத்துரையை பார்வையிட்டு அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என கருத்துரை வழங்கி காயச்சான்று வழங்கினேன். (**மேற்படி காயச்சான்று அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) அவர் 31.07.2019 ம் சிகிச்சை முடிந்து மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார். மேற்படி காயங்கள் மேற்சொன்ன விதத்தில் தாக்கியிருந்தால் ஏற்பட வாய்ப்புள்ளது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.</u>

நான் எதன் அடிப்படையில் கருத்துரை வழங்கினேன் என்றால் அசாஆ 4 காயச்சான்று மற்றும் காயம்பட்ட நபரின் டிஸ்சார்ஜ் சம்மரியை பார்வையிட்டு கருத்துரை வழங்கினேன். முதல் காயம் ஒரு நபர் கூர்மையான கல்லின் மேல் விழுந்தால் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. மற்ற காயங்கள் கல்லால் அடித்துக் கொண்டால் அடித்தால் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை

என் முன்னால் எதிரிகளின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2025.02.03 19:02:45 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**